புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 ஆகஸ்டு 01, 2019 புரட்சி 18 முழக்கம் 29 விலை: ரூ.3.00

## ‘பிராமணர்’ சங்க மாநாட்டில் உயர்நீதிமன்ற நீதிபதிகள்

# ‘அக்ரஹாரங்களைக் காப்பாற்ற வேண்டும்’ என்று வெறிப் பேச்சு

பா.ஜ.க. நடத்தும் ‘இராமராஜ்ய’ ஆட்சியில் பார்ப்பனர்கள் வெளிப்படையாகவே வீதிக்கு வந்து ‘பிராமணர்களே’ உயர் பிறவிகள் என்று பேசத் தொடங்கி விட்டார்கள். குறிப்பாக உயர்நீதிமன்ற நீதிபதிகளே ‘பிராமணர்கள்’ உயர் பிறவிகள் என்று பெருமைப் பேசி மார்தட்டக் கிளம்பி யிருக்கிறார்கள்.

கேரள மாநிலம் கொச்சி நகரில் ஜூலை 19 முதல் 21 வரை ‘தமிழ் பிராமணர் களின் உலக மாநாடு’ (Tamil Brahimins Global Meet) என்ற மாநாட்டை நடத்தி யுள்ளனர்.

‘தமிழ் பிராமணர்கள்’ தமிழ்நாட்டில் இந்த மாநாட்டை நடத்தாமல் கேரளாவில் கொச்சியைத் தேர்வு செய்துள்ளனர். இந்த மாநாட்டில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் அனிதா சுமந்த், கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் சிதம்பரேஷ் ஆகியோரும், நெதர்லாந்து நாட்டுக்கான இந்திய தூதர் வேணு ராஜமோனி என்ற பார்ப்பனரும் பங்கேற்றுப் பேசியிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் உலகம் முழுதும் உயர் பதவிகளைப் பெற்று சர்வதேச சக்திகளாக வலிமை பெற்று வருகின்றனர்.

அமெரிக்காவில் டிரம்ப், அதிபரான பிறகு அந்த நாட்டில் அரசு வழக்கறிஞர்களாகவும், டிரம்ப் ஆலோசனைக் குழுவிலும் பார்ப்பனர்கள் இடம் பெற்றுள்ளனர். அடுத்து வர இருக்கும் அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஒரு பார்ப்பனப் பெண் போட்டியிடக் கூடும் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து நாட்டின் அதிபராக இப்போது கன்சர்வேட்டிவ் கட்சியைச் சார்ந்த போரீஸ் ஜான்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் அய்ரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து வெளியேற வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறவர். ஏற்கனவே இலண்டன் மேயராக இருந்தவர். அவரது புதிய அமைச்சரவையில் இந்தியாவைச் சார்ந்த பிரித்தி பட்டேல், அலோக் சர்மா, ரிஷி சுனாக் என்ற மூன்று பேர் இடம் பெற்றுள்ளனர். இதில் அலோக் சர்மா, ரிஷி சுனாக் இருவரும் பார்ப்பனர்கள். ரிஷி சுனாக் - இன்போசிஸ் நிறுவனரும், பார்ப்பன தொழிலதிபருமான நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷாதாவின் கணவர்.

கொச்சி பார்ப்பன மாநாட்டில் பேசிய கேரள உயர்நீதிமன்ற நீதிபதி சிதம்பரேஷ் என்பவர், “பிராமணர்களாகிய நாம் இரு பிறப்பாளர்கள். நாம் எப்போதும் தலைமைப் பொறுப்பில்தான் இருக்க வேண்டும். ‘பிராமணன்’ சுத்தமான பழக்க வழக்கங்கள், உயர்ந்த சிந்தனை, சைவ உணவு, கருநாடக இசைப் பற்று என்று உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்கள். அந்த வகையில் ‘பிராமணர்கள்’ வாழும் ‘அக்ரஹாரம்’ புனிதமானது. அது பாதுகாக்கப்பட வேண்டும். அங்கேதான் சிறந்த கலாச்சாரப் பாரம்பர்யம் உள்ளது. ‘பிராமணர்களை’த் தவிர வேறு எவரையும் அங்கே குடியமர்த்தக் கூடாது” என்று ‘பிராமண’ குலப் பெருமையைப் பேசிய அவர், தொடர்ந்து பேசுகையில் “ஜாதி அடிப்படையில்




இடஒதுக்கீடுகள் இருக்கக் கூடாது; அது தேவையற்றது; ‘பிராமணர்கள்’ இதை எதிர்த்துப் போராட வேண்டும்” என்றும் பார்ப்பனத் திமிரோடு பேசியிருக்கிறார்.

ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு கூடாது என்று கூறுகிறவர், ஜாதி அடிப்படையில் அக்ரஹாரங்கள் இருக்க வேண்டும் என்கிறார். இவ்வளவையும் பேசிவிட்டு, “நான் அரசியல் அமைப்பு சார்ந்த பதவியில் இருப்பதால் இது சார்ந்து எந்தக் கருத்தையும் பகிரங்கமாகப் பேச முடியாது” என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பார்ப்பன மாநாட்டில் பார்ப்பன நீதிபதிகள் பங்கேற்பது அவர்கள் ஏற்றுக் கொண்ட பதவி ஏற்பு உறுதிமொழிக்கு எதிரானது. பார்ப்பனர் தொடர்பான வழக்குகள் இவர்களிடம் விசாரணைக்கு வந்தால் அவர்கள் வழங்கக் கூடிய தீர்ப்பு பார்ப்பனர்களுக்கு சார்பாக இருக்குமா? சட்டம் சார்ந்து இருக்குமா? என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

‘பிராமணர்கள்’ இரு பிறப்பாளர்கள் என்பது மனுசாஸ்திரத்தின் கருத்தாகும். அதன் அடையாளமாகவே காயத்ரி மந்திரம் ஓதி, அவர்கள் ‘பூணூல்’ போட்டுக் கொள் கிறார்கள். ஒருவன் தன்னை ‘பிராமணன்’, ‘இரு பிறப்பாளர்’ என்று அறிவித்துக் கொள்வதால், ஏனைய ஓர் பிறப்பாளர்களை ‘சூத்திரர்’கள், இழிமக்கள் என்பதாக அறிவிக்கிறார்கள். ‘பிராமணன்’ என்ற பிறவியின் அடிப்படையிலேயே வேதம் ஓதும் உரிமையும் கடவுளிடம் நெருங்கி கர்ப்ப கிரகத்தில் நுழைந்து பூஜை செய்யும் உரிமையும் தங்களுக்கு மட்டுமே உண்டு என்று உரிமை கொண்டாடி ஏனைய பெரும் பான்மை சமூகத்தை தங்களுக்குக் கீழானவர்கள் என்று கூறி வருகிறார்கள். அதற்கு ‘ஆகம விதி’களை எடுத்துக் காட்டுகிறார்கள். அரசியல் சட்டம் மக்கள் அனைவரும் சமம் என்கிறது. ஆகம விதிகள் ‘பிராமணர்களுக்கு உரிய சிறப்பு உரிமை களுக்கு வேறு எவரும் சொந்தம் கொண்டாட முடியாது என்று கூறுகிறது. எனவே தான் ஆகம விதிகளை செல்லாததாக்கி அரசியல் சட்டம் வழங்கிய சமத்துவத்தை நிலை நாட்ட ‘கோயில் கர்ப்பகிரக’ நுழைவு உரிமைக்குப் பெரியார் போராடினார். பெரியார் தொடங்கிய போராட்டத்தின் நியாயங்களை இப்போது பார்ப்பனர்கள் அவர்களின் ‘அதிகாரத் திமிர்’ பேச்சுகள் வழியாக ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களான பார்ப்பனரல் லாத சமூகத்தினருக்கு உணர்த்தி வருகிறார்கள்.

கொச்சி பார்ப்பன மாநாட்டில் நீதிபதிகள் பங்கேற்ற செய்தியை ஊடகங்கள் அனைத்தும் கட்டுப்பாடாக இருட்டடிப்பு செய்து விட்டன. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு மட்டும் இந்த செய்தியை வெளியிட்டது. நடுநிலை ஏடாகவும், ‘மதச் சார்பற்ற’ ஏடாகவும் கூறிக் கொள்ளும் ‘இந்து’ ஆங்கில நாளேடு கூட இந்தச் செய்தியை வெளியிடாமல் பார்ப்பனர் களைக் காப்பாற்றியிருக்கிறது. ●

## நீதிபதிகள் மீது உரிய நடவடிக்கை: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கழகம் கடிதம்

கொச்சி பார்ப்பன மாநாட்டில் பங்கேற்ற சென்னை உயர்நீதிமன்ற பெண் நீதிபதி அனிதா சுமந்த், கேரள உயர்நீதிமன்ற நீதிபதி சிதம்பரேஷ் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

“அரசியல் சட்டத்தின்படி விருப்பு வெறுப்பு இல்லாமல் நீதி வழங்குவதாக உறுதியேற்று உயர் பொறுப்பிற்கு வந்துள்ள நீதிபதிகள் தங்களின் ஜாதி சங்க மாநாட்டில் பங்கேற்கலாமா? அதுவும் பிராமணர்கள் இரு பிறப்பாளர்கள், உயர்வானவர்கள் என்று கூறி ஜாதிப் பாகுபாட்டை நியாயப்படுத்துவது அரசியல் சட்டத்துக்கே எதிரானது அல்லவா? உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கடிதத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. (கடிதத்தின் முழு விவரம் பின்னர்)

### ஸ்டேட் வங்கியைத் தொடர்ந்து அஞ்சலகத்திலும் ‘அவாள்’ மோசடி

## உயர்ஜாதி கட்ஆப் - 42; பட்டியல் பிரிவுக்கு 94.8

உயர்ஜாதியினருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை மோடி ஆட்சி அமுல்படுத்திய பிறகு, ‘ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா’ எழுத்தர் தேர்வுக்கு பார்ப்பனர் உயர்ஜாதியினர் 28.51 கட்ஆப் மதிப்பெண் எடுத்தாலே போதும் என்ற அதிர்ச்சியான தகவல் வெளி வந்தது.

பிற்படுத்தப்பட்டோரும், பட்டியல் இனப் பிரிவினரும் 61.25 ‘கட்ஆப்’ மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். இந்த சமூக அநீதியின் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத நிலையில் தற்போது மேலும் ஒரு பேரிடி செய்தி வெளி வந்திருக்கிறது.

இது நடுவண் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அஞ்சல் துறையில் கிளை அதிகாரிகள் என்ற பதவிகளுக்கான தேர்வு. தமிழ்நாட்டில் 4443 காலி இடங்களுக்கு விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு, 2019 ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிப்பு வெளி வந்தது.

குறைந்த பட்ச கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி; ‘ப்ளஸ் டூ’ படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனாலும் வழக்கமான குளறுபடிகள் அரங்கேறின.

இணையதள வழியாக விண்ணப்பிக்க ஏப்.15, 2019 கடைசி நாள் என்று அறிவித்தனர். ஆனால் அஞ்சல் துறையின் இணைய தள ‘சர்வர்’ மார்ச் 28 முதலே பல பகுதிகளில் செயல்படாமல் முடங்கிக் கிடந்தது. வேலைக்கு மனுப் போடத் துடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள், தமிழ்நாட்டிலுள்ள அஞ்சலகத் தலைமை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ‘சர்வர்’ முடங்கிக் கிடப்பதை கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

‘இது தேர்தல் நேரம்; எனவே சீர் செய்ய இயலாது’ என்று கூறி விட்டனர், அஞ்சலக அதிகாரிகள். இந்த நிலையில் விண்ணப்பிக்கும் தேதியை மேலும் நீட்டித்து காலக் கெடு வழங்குமாறு விடுத்த கோரிக்கையையும் அஞ்சலக அதிகாரிகள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஏற்கனவே அறிவித்த ஏப்.15 தான் கடைசி தேதி என்று பிடிவாதம் பிடித்தது நிர்வாகம். இந்த செய்திகள் ‘தினமணி’ ஏட்டில் வெளி வந்திருக்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் இளைஞர்கள் எப்படியோ விண்ணப்பித்தார்கள். ஸ்டேட் வங்கித் தேர்வில் நடந்த அதே அதிர்ச்சிதான் இங்கும் காத்திருக்கிறது.

பார்ப்பன உயர்ஜாதியினருக்கு நிர்வாகம் நிர்ணயித்துள்ள ‘கட்ஆப்’ மதிப்பெண் 42.

பட்டியலினப் பிரிவுக்கோ – 94.8

பழங்குடிப் பிரிவினருக்கு – 89.6

பிற்படுத்தப்பட்டோருக்கு – 95

பார்ப்பன உயர்ஜாதியினர் 42 மதிப்பெண் பெற்றாலே போதும் என்ற அடிப்படையில் 453 பேருக்கு வேலை வாய்ப்புக்கான நியமன உத்தரவுகளையும் பிறப்பித்துவிட்டனர். இவர்களுக்கான ஊதியம் மாதம் ரூ.12,000 முதல் ரூ.35,480 வரை!

இதே வேலைக்கு உடல்ஊனமுற்ற, பார்வைத் திறனற்ற மாற்றுத் திறனாளிகள்கூட 85.8 சதவீத ‘கட்ஆப்’ மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், பார்ப்பனர் உயர்ஜாதியினர் என்றால் 42 பெற்றாலே போதும்.

சமச்சீர் கல்வியில் படித்த நமது பிள்ளைகள் 500க்கு 450 வாங்கினால்கூட ‘தரமற்ற கல்வி; மனப்பாடக் கல்வி’ என்று ‘வக்கணை’ பேசுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை.

இவர்களின் வேலைக்கான தகுதி என்றால் 500க்கு 210 பெற்றாலே போதும். (அதாவது 42 சதவீதம்)

10 சதவீத இடஒதுக்கீடு இப்படி அக்ரஹாரங்களை கொழுக்க வைக்கவே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

# தகவல் அறியும் சட்டமும் நீர்த்துப் போகிறது!

மக்கள் உரிமைகளையும் மாநிலங்கள் உரிமைகளையும் பறித்து, ஒற்றை பாசிச ஆட்சியாக இந்தியாவை மாற்றி வரும் நடுவண் ஆட்சி - இப்போது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தையும் நீர்த்துப் போகச் செய்து விட்டது. ஆட்சியாளர் ஊழல் - அதிகாரிகள் முறைகேடுகளை அம்பலப் படுத்துவதற்கு மக்களிடம் இருந்த வலிமையான ஆயுதத்தைப் பிடுங்கி விட்டது, நடுவண் ஆட்சி.

- தகவல் ஆணையர் என்ற பதவிக்கு தேர்தல் ஆணையத் தலைவர் பதவிக்கு நிகரான அரசியல் சட்ட உரிமை - ஊதியம் வழங்கப்பட்டு இருந்தது. மாநில தகவல் தரும் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணைய உறுப்பினர்களுக்கு நிகரான உரிமை - ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இப்போது மோடி ஆட்சி கொண்டு வந்த சட்டத்திருத்தம், இந்த சுயேட்சை அதிகாரத்தைப் பறித்து, இந்த ஆணையர்களுக்கான ஊதியத்தை அவ்வப்போது நடுவண் ஆட்சியே நிர்ணயிக்கும் என்று கூறுகிறது.
- ஏற்கனவே இருந்த சட்டப்படி தலைமை தகவல் ஆணையர் - மாநில தகவல் ஆணையர்கள் 5 ஆண்டுகளுக்கு மேல் பதவியில் நீடிக்க முடியாது. ஓய்வு பெறும் வயது 65 என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகாரிகள் அரசுக்கு எதிராக இருந்தாலும்கூட அச்சமின்றி தகவல்களை வழங்கி வந்தனர். இப்போது நடுவண் ஆட்சி, அவர்கள் பதவிக் காலத்தை நீட்டிக்கலாம். ஓய்வு பெறும் வயதையும் நீட்டிக்கலாம் என்று சட்டம்திருத்தப்பட்டு விட்டது. எனவே அரசுக்கு எதிராக செயல்படாமல் இருந்தால் பதவி நீட்டிப்பு கிடைக்கும் என்பதால் அதிகாரிகள் நேர்மையோடு செயல்படுவார்களா என்று எதிர்பார்க்க முடியாது.
- ஏற்கனவே இருந்த சட்டப்படி பிரதமர் நியமிக்கும் குழு - நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் நியமிக்கப்படும் காபினட் அந்தஸ்துள்ள ஒரு அமைச்சர் அனைவரும் சேர்ந்துதான் தலைமை ஆணையரை தேர்வு செய்ய முடியும். மாநிலங்களில் செயல்படும் தகவல் ஆணையர்களை முதலமைச்சரால் நியமிக்கப் படும் மூவர் குழு மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துதான் தேர்வு செய்ய முடியும். இப்போது பதவிக் காலம் மற்றும் ஊதியங்களை நிர்ணயிக்கும் அதிகாரங்களை நடுவண் அரசே எடுத்துக் கொண்டு விட்டதால் மாநிலங்களின் உரிமை பறிக்கப்பட்டு விடுகிறது. தகவல் தரும் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யும் உரிமை குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநருக்குத்தான் உண்டு என்பது பழைய சட்டம். அதுவும் உச்சநீதிமன்றம் நியமிக்கும் விசாரணைக் குழுவால் அதிகாரிகள் மீதான புகார்கள் உறுதிப்படுத்த வேண்டும். இப்போது நடுவண் அரசு நினைத்தாலே பதவி நீக்கம் செய்ய வழி வகுத்துள்ளது சட்டத் திருத்தம்.

நேர்மையான ஆட்சியாளர்களாக இருந்தால் ஏன் இந்தச் சட்டத்துக்கு பயப்பட வேண்டும்?

மூன்று வாரங்களுக்கு முன் பீகாரில் பா.ஜ.க.வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அம்மாநில உயர்நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. அவர் மீதான குற்றச்சாட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தும் ஒரு செயல்பாட்டாளரை நீதிமன்ற வளாகத்திலேயே துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதற்கு தூண்டுதலாக செயல்பட்டார் என்பதாகும். தகவல் பெறும் உரிமைச் சட்டம் என்ற ஒன்று உயிர்த் துடிப்புடன் இருப்பதால் தங்கள் கட்சிக்காரர்கள் தண்டனைக் குள்ளாக வேண்டியிருக்கிறதே, என்ற எண்ணத்தில் தான் இந்த சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுகிறது.

## 75 சதவீத வேலை மாநில மக்களுக்கே: ஆந்திராவில் சட்டம் நிறைவேறியது

ஆந்திர முதலமைச்சர் ஒய்.எஸ். ஜெகன்மோகன், கடந்த ஜூலை 24, 2019 அன்று ஆந்திர சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார். ஆந்திர தொழிற்சாலை மற்றும் உற்பத்தி நிறுவனங்களில் உள்ளூர் இளைஞர்களுக்கு 75 சதவீத வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் சட்டம் இது. மாநிலத்தில் முதலீடு செய்வோருக்கு உதவக் கூடியதாகவும், நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாகவும் இந்தச் சட்டம் இருக்கும் என்றும், இது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழுமானால் முதலீட்டாளர்களுடன் பேசித் தீர்க்கத் தயாராக இருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார். ஆந்திர மாநில தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் ஜி.ஜெயராமன், இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசும்போது, இந்தச் சட்டம் மாநிலத்திலுள்ள அனைத்துத் தொழிற்சாலைகள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அரசு தனியார் கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கும் பொருந்தும் என்று கூறினார்.

வேலைக்கு உரிய தகுதியுடன் உள்ளூர் இளைஞர்கள் கிடைக்கவில்லை என்ற காரணம் காட்டி, சட்டத்திலிருந்து விதிவிலக்கு கேட்டால், அரசு தலையிட்டு இரண்டு வாரங்களில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று மசோதா கூறுகிறது. அந்தந்தப் பகுதியில் உரிய தகுதி உள்ள இளைஞர்கள் கிடைக்காவிட்டால், உள்ளூர் இளைஞர்களுக்கு தேவையான தொழில் திறன் பயிற்சிகளை அளிக்க தொழிற்சாலைகள் முன்வரவேண்டும். மூன்று ஆண்டுகளுக்குள் இளைஞர்களை தயார் செய்ய வேண்டும் என்றும், அதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் நிதி உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் முதலமைச்சர் கூறினார். ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த இளைஞர்கள்தான் உள்ளூர்காரர்கள் என்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆந்திர முதல்வர் தெளிவுபடுத்தியுள்ளார். இதைத் தொடர்ந்து சில வடநாட்டு தொழில் நிறுவனங்கள் ஆந்திராவிலிருந்து வெளியேறத் தொடங்கியிருக்கின்றன. ஆந்திர முதல்வரின் இந்த சீரிய திட்டத்தை தமிழ்நாடு அரசு பின்பற்றுமா?

## அன்று ஜெர்மன் இனவெறி மொழி; இன்று ‘இந்தி’ மதவெறிக்கான மொழி!

ஆங்கில ‘இந்து’ ஏட்டின் ஞாயிறு மலரில் (ஜூலை 28, 2019) ருச்சின் ஜோஷி என்ற எழுத்தாளர், ‘ஜெர்மன் காட்டிய வழியில் இந்தியும் பயணிக்கிறதா’ என்ற ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அதில் ஜெர்மன் மொழி 1925லிருந்து 1945 வரை இனவெறி - இனப்படுகொலைகளோடு பிரிக்க முடியாத தொடர்புடைய மொழியாகவே உலக அளவில் கருதப்பட்டதை சுட்டிக் காட்டுகிறார்.

“இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு ஜெர்மன் மொழி உலக அளவில் சிலகாலம் வெறுக்கப் பட்ட மொழியாகவே இருந்தது. தலைசிறந்த யூத எழுத்தாளர்கள், ஜெர்மானிய மொழியில் உயர்ந்த இலக்கியங்களைப் படைத்திருந்தாலும்கூட 1925 லிருந்து 1945ஆம் ஆண்டு வரை கொடூரமான மக்கள் விரோத கருத்துகளான இனவெறி - இனப் படுகொலைகளை சுமந்து செல்லும் வாகனமாக ஜெர்மன் மொழி மாற்றப்பட்டதே, இந்த புறக் கணிப்புக்குக் காரணம். ஜெர்மன் கொடூரமான ஆபத்தான மனித வதை மொழியாகவே கருதப் பட்டது. அப்பாவி மக்களை இனப்படுகொலைக் குள்ளாக்கும் இராணுவ உத்தரவுகளுக்கான மொழியாக அது பார்க்கப்பட்டது.

இந்தி மொழியும் அவ்வாறு பார்க்கப்படும் ஆபத்துகள், அடுத்த சில ஆண்டுகளில் உருவாகிடக் கூடும். மனிதர்களை அடித்துக் கொல்லுவதற்கும் மதவெறியைத் திணிப்பதற்கும் குடியரசு அமைப்பை ஒழிப்பதற்குமான மொழியாக ஜெர்மனியைப்போல் இந்தியையும் வெறுக்கும் நிலை வரக்கூடும். இந்தி மொழி இதற்கான வாகனமாகவே மாற்றப்பட்டு அரசு அதிகாரம் வழியாக திணிக்கப்படுகிறது. சமூகத்தில் கொடிய நஞ்சைப் பரப்பும் கருத்துகளின் வடிவமாகி வரும் இந்தியின் திணிப்பை கட்டுப்படுத்தியாக வேண்டும்; இல்லையேல் அதுவும் வெறுப்பு மொழியாகி விடும்” என்று அந்தக் கட்டுரையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதே கருத்தை பெரியார் 1929ஆம் ஆண்டிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார். “தமிழர்கள் மீது இந்தியைத் திணிக்கும் ஆரியர்களின் கலாச்சாரத்தை யும் சமஸ்கிருதத்தையும் தமிழர்கள் மீது திணிக்கும் நோக்கத்துடன்தான் இந்தி திணிக்கப்படுகிறது” என்று பெரியார் கூறினார்.

“இந்தி மொழி என்பது தமிழ் மக்களுக்கு விரோதியான ஆரிய மொழியாகும். அதிலுள்ள வாசகங்கள் முழுதும் ஆரியப் புராணங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் கொண்டனவும் **பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்பட்டனவும் ஆகும்.** இந்த நாட்டில் இப்போது சமஸ்கிருதம் இருப்பது போலவும் அது உபயோகப்படுவது போலவும் இந்தி ஒரு சிறிதும் தேவையில்லாததாகும்.”
- பெரியார் - 20.1.1929 ‘குடிஅரசு’

# ஜாதி ஆணவப் படுகொலைகளைக் கண்டித்து கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம்




தொடரும் ஜாதி வெறித் தாக்குதல்கள், ஜாதிய ஆணவப் படுகொலைகளை அலட்சியப்படுத்தும் தமிழக அரசைக் கண்டித்து கோவையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் கடந்த 23/07/2019 செவ்வாய் மாலை நான்கு மணியளவில் கோவை தெற்கு வட்டாச்சியர் அலுவலகம் முன்பு காவல் துறையின் தடையை மீறி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தலைமை நிர்மல்குமார் (கோவை மாநகர செயலாளர்), முன்னிலை ப கிருட்டிணன் (கோவை மாநகர அமைப்பாளர்), வரவேற்புரை மா.நேருதாசு (கோவை மாநகர தலைவர்), கண்டன ஆர்ப்பாட்டத்தில் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், பொருளாளர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன், தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன், நாமக்கல் மாவட்ட தலைவர் சாமிநாதன், கோவை மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன், கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், திருப்பூர் மாவட்ட செயலாளர் முகில்ராசு உள்ளிட்டோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் தலைமைக் குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.சக்தி, காவலாண்டியூர் ஈசுவரன், ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எழிலன் மற்றும் கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, கோபி, மேட்டூர், சேலம், நாமக்கல் மாவட்டங்களை சேர்ந்த கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக கழக வழக்கறிஞர் ர.சிலம்பரசன் நன்றி கூறினார்.

## சமூகநீதியாளர்கள் பங்கேற்று உரை

# 10 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து சென்னையில் கழகம் ஆர்ப்பாட்டம்




நடுவண் அரசே! இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சீரழிக்கும் உயர்ஜாதியினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை இரத்து செய்! தமிழக அரசே; 10 சதவீத இடஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் வழங்காதே! என்ற கோரிக்கைகளை முன் வைத்து சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஜூலை 29, 2019 மாலை 4.30 மணியளவில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். மருத்துவர் எழிலன் (இளைஞர் இயக்கம்), திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்), செந்தில் (இளந்தமிழகம்), முனைவர் சுந்தரவள்ளி (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம்), மருத்துவர் இரவீந்திரநாத் (சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கம்) ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

சமூக நீதி தத்துவத்தின் நோக்கம் - இடஒதுக்கீடு சந்தித்த தடைகள் - 10 சதவீத இடஒதுக்கீட்டைத் திணித்து இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைக்கும் மனுதர்ம சூழ்ச்சி - பா.ஜ.க ஆட்சியின் தேசிய கல்விக் கொள்கையின் 'வர்ணாஸ்ரம-குலக்கல்வி' கருத்துகள் என்று பல்வேறு அம்சங்களை பெரியாரியல் பார்வையில் பேச்சாளர்கள் ஆழமான கருத்துகளை முன் வைத்தனர். ஆர்ப்பாட்டமாக இருந்தாலும் சமூக நீதிக்கான கருத்தரங்கமாகவே நிகழ்வு அமைந்திருந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில், தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி 10 சதவீத ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் தராத நிலையிலேயே தமிழக முதல்வரின் தனிச் செயலாளரை தலைவராகக் கொண்டு செயல்படும் 'ரெப்கோ' வங்கியில் உயர்ஜாதிப் பிரிவினருக்கு அவசர அவசரமாக 10 சதவீத ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டினார். ஸ்டேட் வங்கியில் பார்ப்பனர் 'கட் ஆப்' மார்க் 28 என்று நிர்ணயித்தவர்கள், இப்போது அஞ்சலக கிளை மேலாளர் வேலைக்கு உயர்ஜாதியினருக்கு 42 மதிப்பெண்ணும், பட்டியல் பிரிவினருக்கு 94.8 ஆகவும், பிற்படுத்தப்பட்டோருக்கு 95 ஆகவும் 'கட் ஆப்' நிர்ணயித்துள்ளதை சுட்டிக் காட்டினார். (இது குறித்து விரிவான செய்தி தனியே வெளியிடப்பட்டுள்ளது) 150க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். 'நிமிர்வோம்' வாசகர் வட்ட அமைப்பாளர் யுவராஜ், நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

பேராசிரியர் சுந்தரவள்ளி தனது உரையில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் களப் பணிகளை மனம் திறந்து பாராட்டினார். நிகழ்வில் தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், அன்பு. தனசேகரன், தென்சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழவேந்தன், செயலாளர் இரா. உமாபதி, வடசென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஏசுகுமார், பாஸ்கர், முனுசாமி, தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பொறுப்பாளர்களும் ஆதரவாளர்களும் ஏராளமான கழகத் தோழர்களும் பங்கேற்றனர்.

– நமது செய்தியாளர்

## சோதிட மூட நம்பிக்கையால் வீழ்ந்த சரவணபவன் ராஜகோபால்

உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த சரவணபவன் ராஜகோபால், ஜூலை 18ஆம் தேதி இறந்தார்.

ஏழு வயதிலிருந்து உழைத்து உயர்ந்தவர் ராஜகோபால். ஆரம்ப காலத்தில் மெஸ் நடத்தியவர். ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளர்கள் சாப்பிட்டுவிட்டுச் சென்ற பிறகு, அவர்கள் பயன்படுத்திய இலைகளைப் பிரித்துப் பார்ப்பாராம். எந்த உணவு அய்ட்டத்தைச் சாப்பிடாமல் தவிர்த்திருக்கிறார்கள், எதை விரும்பிச் சாப்பிட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பாராம். அதை வைத்து அடுத்த வேளைக்கான சாப்பாடு மெனுவை மாற்றியமைப்பார். இந்த நுணுக்கத்தைப் பயன்படுத்தித்தான் ஓட்டல் தொழிலில் உச்சத்தை அடைந்தார் ராஜகோபால்.

ஓட்டல் தொழிலில் பார்ப்பனர்கள் கொடி கட்டிப் பறந்த காலத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட நாடார் சமூகத்தில் பிறந்த அவர் தொடங்கிய 'சரவண பவன்' ஓட்டல்கள் சென்னையில் பார்ப்பனர்கள் ஓட்டலுக்கு மிகப் பெரும் சவாலாக மாறியது. 'சரவண பவன்' அதன் கிளைகளை உலகம் முழுதும் கொண்டு சென்றது. பெரியார் நடத்திய சுயமரியாதை இயக்க மாநாடுகளில் 'நாடார் சமையலில் உணவு வழங்கப்படும்' என்ற அறிவிப்பை வெளியிட்டார். அந்தப் புரட்சியின் தொடர்ச்சியாகவே 'சரவண பவன்' வெற்றிக் கொடியை பறக்கவிட்டது என்று சொல்லலாம். அத்தகைய வெற்றியாளர் சோதிட மூட நம்பிகையில் வீழ்ந்தார்.

26.10.2001 – இதுதான் ஜீவஜோதியின் கணவர் பிரின்ஸ் சாந்தகுமார் கொலை செய்யப்பட்ட நாள். ராஜகோபாலின் வெற்றி வாழ்க்கையை மாற்றிய நாளும்கூட.

'ஆபரேஷன் கந்தாஸ்' என்று பெயரிட்டு, இந்தக் கொலை வழக்கைத் துப்பறிய தனிப்படை அமைத்தார் அப்போதைய காவல்துறை ஆணையர் முத்துக் கருப்பன். அதில் தியாகராயர் நகர் துணை ஆணையர் சண்முக ராஜேஸ்வரன், கிண்டி உதவி ஆணையர் ராமச்சந்திரன், வேளச்சேரி ஆய்வாளர் தெய்வசிகாமணி ஆகியோர் இடம்பெற்றனர். இவர்கள் சேகரித்த தடயங்கள், சாட்சியங்களின் அடிப்படையில் இரண்டாயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இதையடுத்தே கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ராஜகோபாலுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த காவல்துறை அதிகாரி ஒருவரிடம் பேசியபோது, ''ராஜகோபாலை திசை திருப்பியது யாரோ ஒரு ஜோசியக்காரர்தான். புதியதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்தால், பெரிய ஆளாகலாம் என்று சொல்லியிருக்கிறார். அதை நம்பி தவறான பாதையில் சென்றுவிட்டார். ஜீவஜோதியைத் திருமணம் முடிக்க நடந்த முயற்சியில்தான், அவரின் கணவர் சாந்தகுமார் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கை விசாரித்த சமயத்தில் திடீரென்று ஒருநாள் துணை ஆணையர் சண்முகராஜேஸ்வரனைத் தனியாகச் சந்திக்கவேண்டும் என்று ராஜகோபால் தரப்பினர் கேட்டனர். முதலில் யோசித்த துணை ஆணையர், பிறகு ஒப்புக் கொண்டார். 'இந்த வழக்கில் உங்கள் பெயர் எங்களை உறுத்துகிறது. அண்ணாச்சி அன்றாடம் வழிபடும் முருகனை நினைவுபடுத்துகிறது. நீங்கள் விலகிக் கொண்டால்...' என்று பேச்சை ஆரம்பித்தார்கள். இடைமறித்த துணை ஆணையர், 'இதை வேறு கோணத்தில் பாருங்கள். ராஜகோபால் வழிபடும் அதே முருகன்தான் என்னை விசாரிக்கவே சிறப்பாக நியமித்திருக்கிறார்' என்று பதிலடி தந்தாராம் அந்த அதிகாரி. ஜூனியர் விகடன் இத்தகவல்களை வெளியிட்டுள்ளது

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## மாட்டிறைச்சி முகநூல் பதிவுக்காக கழகத் தோழர் நிர்மல் கைது

# அனைத்து இயக்கங்கள் கண்டனம்

*மாட்டிறைச்சியை ஆதரித்த முகநூல் பதிவுக்காக கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழக செயலாளர் நா.வே. நிர்மல்குமார், காவல்துறையால் பிணையில் வெளிவர முடியாத சட்டப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.*



காவல் துறையின் சிறப்பு பிரிவுகள் தொடர்ந்து மக்களுக்காய் களத்தில் நிற்கும் தோழர்களின் முகநூல் பதிவுகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அந்த வகையில் கோவையில் ஜாதி, மத வெறியர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்களோடு களத்தில் நின்று போராடும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் நிர்மல் பதிவை பதிவிட்ட அன்றே காவல்துறை கண்காணித்திருக்கும்.

அதன் பிறகு ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்கத் தவறும் தமிழக அரசு, காவல் துறை ஆகியவற்றை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஆர்பாட்டம் நடத்த அனுமதி கேட்கப்பட்டது. 17.07.2019 அன்று ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுப்புக் கடிதம் கொடுத்த காவல்துறை அக்கடிதத்தில் நிர்மலின் முகநூல் பதிவையே காரணம் காட்டியுள்ளது. மேலும் நிர்மல் தன் பதிவில் இந்துக்களை கொச்சைப்படுத்தியுள்ளதாக, இல்லாத ஒரு கருத்தை திணித்தது காவல் துறை. அதன் பிறகு 10 நாட்கள் கழித்து அப்பதிவினால் எந்த அசம்பாவிதமோ, சமூக அமைதியை குலைக்கும் சம்பவமோ நடக்காத நிலையில் தோழர் நிர்மல் அவர்களை திடீரென பிணையில் வெளிவர முடியாத சட்டப் பிரிவு 505/2 இன் படி வழக்கு பதிவு செய்து சனிக்கிழமை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது காவல் துறை.

கழகத் தோழர் கைது செய்யப்பட்டதை அறிந்த அனைத்துக் கட்சியினரும் கொதித்தெழுந்தனர். கைதைக் கண்டித்து கோவையில் அனைத்து இயக்கங்கள் சார்பில் த.பெ.தி.க. பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் அவசரமாக காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் கூடினர்.

ஜூலை 31 அன்று கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்தனர். கூட்டத்தில் பங்கேற்ற அமைப்புகள்:

தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித்தமிழர் பேரவை, விசிக, திராவிடர் கழகம், சிபிஅய், சிபிஎம், திராவிடர் தமிழர் கட்சி, தீண்டாமை ஒழிப்பு முண்ணனி, தமிழ்தேசிய விடுதலை முண்ணனி, மே 17 இயக்கம், தமிழ்நாடு திராவிடர் கழகம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம், நன்செய் பிரசுரம், புரட்சிகர இளைஞர் முண்ணனி, புரட்சிகர இளைஞர் கழகம்,தமிழர் கழகம், ஜனநாயக வழக்கறிஞர்கள் சங்கம், முற்போக்கு வழக்கறிஞர்கள் சங்கம், தமிழ்நாடு தேசிய இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், காட்டாறு, தோழர் அறக்கட்டளை, தமிழர் விடுதலைக் கட்சி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், அம்பேத்கர் படிப்பகம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட அமைப்புகளிலிருந்து 60க்கும்



மேற்பட்ட தோழர்கள் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்தனர். நிறைவாக தோழர் தியாகு (தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி) கருத்துரை வழங்கினார்.

505/2 என்கிற பிரிவு பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் படி பேசுவது, செயல்படுவது என்பதாகும். இவ்வழக்கு சற்றும் பொறுத்தமில்லாத பொய் வழக்கே ஆகும்.

இந்து இயக்கத்தை சார்ந்தவர்கள் வன்முறையை தூண்டும் வகையிலும், பெண்களை, காவல்துறையை, நீதிமன்றத்தை எவ்வளவு இழிவுபடுத்தி பேசினாலும் காவல் துறை கை கட்டி வேடிக்கை பார்க்கிறது.

எஸ்.வி.சேகர் எனும் பிஜேபி பார்ப்பனர் பத்திரிக்கையில் பணிபுரியும் பெண்களை நடத்தை கெட்டவர்கள் என்றார்.

எச்.ராஜா எனும் பிஜேபி பார்ப்பனர் ஹைகோர்ட்டாவது மயிராவது என்றார். காவல்துறை உயர் அதிகாரியை பார்த்து நேருக்கு நேராக காவல்துறை ஊழல் துறை என்றும் உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றும் திமிராக பேசினார். அவரிடம் காவல் துறை அதிகாரி குழைந்து, நெளிந்து கெஞ்சுகிறார். (வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.)

சடகோபன் ராமானுஜ ஜீயர் என்பவர் பொதுக் கூட்டத்திலேயே சோடா பாட்டில் வீசுவேன், கல்லை வீசுவேன் என பேசினார். அவர் மீது ஒரு நடவடிக்கையும் இல்லை இது தான் காவல் துறை சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் நிலை.

ஆனால் கோவையில் யாரோ மணிகண்டன் என்பவர் புகார் அளித்ததாகக் கூறி ஒரு முகநூல் பதிவிற்காக 15 நாள்கள் கழித்து பொய் வழக்குப் போட்டு கழகத் தோழர்கள் மீது காவல் துறை பாய்கிறது என்றால் நடுநிலையோடு தான் காவல்துறை நடக்கிறதா என்று பொதுமக்கள் அய்யப்படுகிறார்கள்.

இது தொடர்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காவல் துறைக்கு நீதிமன்றங்கள் அளித்துள்ள வழிகாட்டு நெறி முறைகள், உத்தரவுகள், தீர்ப்புகள் என்பனவற்றை சுட்டிக்காட்டி இனி சமூக அமைதிக்கு உண்மையிலேயே குந்தகம் விளைவிக்கும் காவி தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஆதாரங்களுடன் புகார் அளிக்க வேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவுறுத்தி உள்ளார். ஆதாரங்களுடன் அளிக்கப்படும் புகார்களுக்கு காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் இருக்குமானால் அரசுத்துறை, காவல் துறை மீதே வழக்குகளை தனியாக பதிவு செய்ய வேண்டி இருக்கும் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். சிறை, வழக்குகள் பெரியார் தொண்டர்களை சோர்வடையச் செய்து விடும் என்று அரசோ, காவல் துறையோ நம்பினால் அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும்.

கருப்புச் சட்டையை மாட்டிக் கொண்டு களத்தில் நிற்கும் பெரியார் தொண்டன் கொண்ட கொள்கைக்காக எதையும் சந்திக்கும் துணிவுடனும், எந்த இழப்பிற்கும் தயாராகவும் தான் நிற்பான் என அரசும், காவல் துறையும் தெரிந்து கொள்வது நல்லது, அதே சமயம் பொய் வழக்குகளை போடும் காவல்துறையை நீதிமன்றம் மூலம் அம்பலப்படுத்துவதும் அவசியம்.

## நங்கவள்ளி கிருட்டிணன் இல்லத் திருமணவிழா




கழக செயல்பாட்டாளரும், சேலம் மாவட்ட அமைப்பாளருமான பொ.கிருட்டிணன்-கி.லலிதா இணையரின் மகள் கி.தமிழ்ச்செல்வி-ஏ.பிரபு ஆகியோரது இணையேற்பு விழா 13.07.2019 சனி பகல் 11 மணியளவில் வனவாசி ரங்கண்ணா திருமண மண்டபத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், பழ. ஜீவானந்தம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மேச்சேரி தமிழரசன், நங்கவள்ளி அன்பு உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மணவிழாவிற்கு கழகத் தோழர்கள் பெருமளவில் திரண்டு வந்திருந்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
7373684049 newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd August 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN